بسم الله الرحمن الرحیم　　نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم　　وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللَّهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

பதர் காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 40

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ர:ஃபீக் அஹ்மது

7 ரபிய்யுல் அவ்வல் 1438 ஹிஜ்ரி கமரி　8 ஃபதஹ் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி　8 டிசம்பர் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அப்துல்லாஹ் ஆத்தம் தொடர்பாகவும் அஹ்மது பேக் மற்றும் அவரது மருமகன் தொடர்பாகவும் செய்யப்பட்ட இந்த இரண்டு முன்னறிவிப்புகளும் நிபந்தனைக்குட்பட்டவையாகும் என்று நூறு முறை நான் எடுத்துக் கூறி விட்டேன்.**

**அறிவற்றவர்களே! நீங்கள் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஹஸ்ரத் யூனுஸ் (அலை) அவர்களது வரலாற்றைப் பற்றி தெரியாதவர்களாக இருக்கின்றீர்களா என்ன? யூனுஸ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பில் எந்தவொரு நிபந்தனையும் இருக்கவில்லை. அவ்வாறிருந்தும் கூட தவ்பா மற்றும் இஸ்திக்ஃபார் மூலமாக அவரது சமுதாயம் காப்பாற்றப்பட்டது. ஆனால், அந்த சமுதாயம் தொடர்பாக அவர்கள் கண்டிப்பாக நாற்பது நாட்களுக்குள் அழிக்கப்பட்டு விடுவர் என்ற இறைவனின் உறுதியான வாக்குறுதி இருந்தது. ஆனால், அந்த சமுதாயம் முன்னறிவிப்பிற்கேற்ப நாற்பது நாட்களுக்குள் அழிந்து விட்டதா என்ன? அளவுக்கு அதிகமாக ஏன் தீங்கு விளைவிக்கின்றீர்கள்?**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நான் குறிப்பிடுவதற்கு தகுதியுள்ள வேறு சில விஷயங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது, அப்துல் ஹகீம் கான் 'மஸீஹுத்' தஜ்ஜால் என்ற தனது நூலில் மற்ற எதிரிகளைப் போன்றே எனது முன்னறிவிப்புகள் நிறைவேறாமல் அவை தவறு என்று தெரிய வந்திருப்பதாகக் கூறி பொதுமக்களை ஏமாற்ற விரும்புகின்றார். அதனால் அப்துல்லாஹ் ஆத்தம் பற்றிய முன்னறிவிப்பும் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி மற்றும் அவரது சில நண்பர்கள் தொடர்பான முன்னறிவிப்பு தொடர்பாகவும் எடுத்துக் கூறியவாறு அவை நிறைவேறவில்லை என்று அவர் வாதம் செய்துள்ளார். ஆனால், நான் அந்த முன்னறிவிப்புகளைப் பற்றி அவை அல்லாஹ்வின் நடைமுறைக்கேற்ப நிறைவேறி விட்டன என்று பலமுறை எழுதி விட்டேன். அப்துல்லாஹ் ஆத்தம் தொடர்பாகவும் அஹ்மது பேக் மற்றும் அவரது மருமகன் தொடர்பாகவும் செய்யப்பட்ட இந்த இரண்டு முன்னறிவிப்புகளும் நிபந்தனைக்குட்பட்டவையாகும் என்று நான் நூறு முறை எடுத்துக் கூறியுள்ளேன். அப்துல்லாஹ் ஆத்தம் தொடர்பாக முன்னறிவிப்பின் சொற்கள் இவையாகும். அதாவது, அவர் உண்மையின் பக்கம் திரும்பாமல் இருந்தால் 15 மாதங்களுக்குள் அழிந்து விடுவார். ஆனால், நிபந்தனை என்னவென்றால் வெளிப்படையான முறையில் அவர் முஸ்லிமாகி விட வேண்டும் என்ற சொற்கள் அதில் இல்லை. ருஜூஃ (திரும்புதல்) என்ற சொல் உள்ளத்துடன் தொடர்புடையதாகும்.[1] எனவே, அவர் ஏறக்குறைய 60 அல்லது 70 மனிதர்கள் இருந்த அந்த சபையில் முன்னறிவிப்பைக் கேட்ட பிறகு (உண்மையின் பக்கம்) திரும்புகின்ற அடையாளங்களை வெளிப்படுத்தினார். அதாவது, நான் அவருக்கு இந்த முன்னறிவிப்பைக் கேட்க வைத்து நீர் எங்களது நபி கரீம் (ஸல்) அவர்களைப் பற்றி உமது நூலில் தஜ்ஜால் என்று கூறியுள்ளீர். அதற்கு தண்டனையாகவே பதினைந்து மாதங்களுக்குள் உமது வாழ்நாள் முடிந்து விடும் என்று இந்த முன்னறிவிப்பில் உள்ளது என்று நான் கூறியதும் அவரது நிறம் மஞ்சளாகி விட்டது. அவர் தனது நாவை வெளியில் தொங்க விட்டார். தனது இரு கைகளையும் காதுகளில் வைத்தார். நான் ஒருபோதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தஜ்ஜால் என்று பெயர் வைக்கவில்லை என்று உரத்த குரலில் கூறினார். இந்த சபையில் அமிர்தசரஸைச் சார்ந்த முஸ்லிம் தலைவர் ஒருவரும் இருந்தார். அவரது பெயர் அநேகமாக யூசுப் ஷா ஆக இருக்கலாம். பல கிறித்தவர்களும் முஸ்லிம்களும் அந்த சபையில் இருந்தனர். குறிப்பாக கிறித்தவர்களில் டாக்டர் மார்ட்டின் கிளார்க் அவர்களும் கூட இருந்தார்கள். இவர் பிறகு என் மீது கொலை வழக்கு தொடுத்திருந்தார். இவர்கள் அனைவரிடமும் இந்த விஷயம் நடைபெற்றதா? இல்லையா? என்பதைப் பற்றி சத்தியம் செய்து கூறுமாறு கேட்க வேண்டும். உண்மையிலேயே இந்த சொற்கள் அப்துல்லாஹ் ஆத்தமின் நாவிலிருந்து வெளி வந்திருந்தால் பிறகு இவை தற்பெருமை மற்றும் தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் கூறப்பட்ட சொற்களா என்ன? அல்லது பணிவு மற்றும் திரும்புதல் தொடர்பான சொற்களா? என்பதை சுயமே நீங்களே சிந்தனை செய்ய வேண்டும். நான் இதுபோன்று தாழ்மையுடனும் பணிவுடனும் கூறப்பட்ட இந்த சொற்களை எனது முழு வாழ்நாளிலும் எந்தவொரு கிறித்தவரின் நாவிலிருந்தும் கேட்டதில்லை. மாறாக, பெரும்பாலும் அவர்களது நூல்கள் பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றிய ஏச்சுப் பேச்சுக்களால் நிறைந்திருந்ததை நான் பார்த்துள்ளேன். எதிரியாக இருந்த ஒரு நபர் வாக்குவாதம் நடந்த அதே சமயத்தில் இந்த அளவு தாழ்மையுடனும் பணிவுடனும் தான் (பெருமானார் (ஸல்) அவர்களை) தஜ்ஜால் என்று கூறவில்லை என்று கூறி அதை மறுத்துள்ளார். பிறகு பதினைந்து மாதங்கள் வரை அமைதியாக இருந்தார். இன்னும் சொல்வதென்றால், அழுது கொண்டிருந்தார் என்றால் பிறகு அவர் கண்ணியமாக நடந்து கொண்டதற்கு ஏற்ப இறைவனது பார்வையில் இதற்கான பலனைப் பெறுவதற்கான உரிமை அவருக்கு இல்லையா என்ன?[2] பிறகு நீண்ட நாட்கள் வரை அவர் வாழவில்லை. மாறாக, சில மாதங்களுக்குப் பிறகு அவர் வஃபாத்தாகி விட்டார். இதற்கு பிறகு அவர் எந்தவொரு தற்பெருமையையும் வெளிப்படுத்திக் காட்டவில்லை. எவையெல்லாம் அவருடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றதோ அது கிறித்தவர்கள் தம் தரப்பிலிருந்து கூறுவதாகும். சுருக்கமாக, முன்னறிவிப்பில் அவரது மரணத்தைப் பற்றி தான் கூறப்பட்டிருந்தது. அதற்கேற்ப அவர் எனது வாழ்நாளிலேயே இறந்து விட்டார். இறைவன் எனது வயதை அதிகமாக்கி அவரது வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டான். இப்போது அவர் குறிப்பிட்ட அந்த காலக்கட்டத்திற்குள் இறக்கவில்லை என்ற விஷயத்தில் அழுத்தம் காட்டுவது எந்த அளவு அநீதியாகவும் காழ்ப்புணர்ச்சி காட்டுவதாகவும் உள்ளது? அறிவற்றவர்களே! நீங்கள் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஹஸ்ரத் யூனுஸ் (அலை) அவர்களது வரலாற்றைப் பற்றி தெரியாதவர்களாக இருக்கின்றீர்களா என்ன? யூனுஸ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பில் எந்தவொரு நிபந்தனையும் இருக்கவில்லை. அவ்வாறிருந்தும் கூட தவ்பா மற்றும் இஸ்திக்ஃபார் மூலமாக அவரது சமுதாயம் காப்பாற்றப்பட்டது. ஆனால், அந்த சமுதாயம் தொடர்பாக அவர்கள் கண்டிப்பாக நாற்பது நாட்களுக்குள் அழிக்கப்பட்டு விடுவர் என்ற இறைவனின் உறுதியான வாக்குறுதி இருந்தது. ஆனால், அந்த சமுதாயம் முன்னறிவிப்பிற்கேற்ப நாற்பது நாட்களுக்குள் அழிந்து விட்டதா என்ன? நீங்கள் விரும்பினால் துர்ரே மன்சூரில் யூனுஸ் (அலை) அவர்களைப் பற்றிய வரலாற்றைப் பாருங்கள் அல்லது யோனா

(தொடர்ச்சி 7 -வது பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்ஹம்துலில்லாஹ். அஹ்மதிய்யா ஜமாஅத் ரெஜினா(Regina)விற்கும் அல்லாஹ் பள்ளிவாயிலைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். இது மிகவும் அழகிய பள்ளிவாசலாகும் - மாஷா அல்லாஹ். இப்போது ஜமாஅத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்க்கும் போது இந்த பள்ளிவாயில் தற்போதுள்ள தேவையை விட மூன்று மடங்கு பெரியதாகும். இதற்கான செலவுகளையும் உள்ளூர் ஜமாஅத்தே செலுத்தியுள்ளது என்று என்னிடம் கூறப்பட்டது அல்லது அதனை செலுத்துவதாக அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளனர். இன்னும் சொல்வதென்றால், முழு செலவில் ரொக்கத் தொகையின் அடிப்படையில் பார்க்கும்போது அதில் மூன்றில் ஒரு பகுதியை இரண்டு சகோதரர்கள் செலுத்துவதாகப் பொறுப்பேற்றுள்ளனர். அதில் ஒருவர் நமது டாக்டர் ஷம்சுல் ஹக் ஷஹீது அவர்களின் மனைவி ஆவார்.

Contractor -களின் குறைந்தபட்ச Tender உடன் ஒப்பிடுகையில் அதை விட பாதிக்கும் மேலாக குறைவான செலவில் பள்ளிவாயில் கட்டப்பட்டிருக்கின்றது. இந்த பள்ளிவாயிலைக் கட்டுவதில் ஜமாஅத்தின் பணம் பாதிக்கும் மேல் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது என்று எனக்கு கூறப்பட்டது. சிஸ்காடூனைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் கட்டுமானப் பணிகளில் தன்னார்வத் தொண்டர்களாக தொண்டாற்றி உள்ளனர். இவ்வாறே இந்தத் தொகையை அவர்கள் மிச்சப்படுத்தி உள்ளனர். இவ்வாறே மற்ற தன்னார்வத் தொண்டர்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த சகோதரர்களின் Contractor -க்கு ஒரு நாளாவது Contractor மூலமாகவும் உதவி கிடைத்துள்ளது.

ஒரு பக்கம் சில முஸ்லிம்கள் உலகில் அமைதியின்மையைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ளனர். மறுபுறம் முன்னேற்றமடைந்த உலக முன்னுரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற அத்தகைய ஒரு நாட்டில் வாழ்கின்ற அஹ்மதிகள் அல்லாஹ்வின் வீட்டைக் கட்டுவதற்காக தங்களது பொருளையும், நேரத்தையும் அர்ப்பணிக்கின்றனர்.

இந்தப் பள்ளிவாயிலைக் கட்டியதன் மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத் கனடாவிற்கு முதல் முறையாக இந்தப் பெருமையும் கிடைத்திருக்கின்றது. அதாவது, பெரும்பாலான அஹ்மதி தன்னார்வத் தொண்டர்கள் பணி செய்து ஜமாஅத்தின் தொகையை மிச்சப்படுத்தியுள்ளனர். உலகின் மற்ற இடங்களிலும் இவ்வாறு பணி நடக்கின்றது. ஆனால், இங்கு முதன் முறையாக இப்போதுதான் இவ்வாறு நடந்துள்ளது. அல்லாஹ் தியாகம் செய்த அனைவருக்கும் அவர்கள் பொருளைத் தியாகம் செய்தவர்களாக இருந்தாலும் சரி, நேரத்தை தியாகம் செய்தவர்களாக இருந்தாலும் சரி, ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவருமே பெரும் பெரும் தொகையை இதற்காக செலுத்தியுள்ளனர் அல்லது இதற்காக வாக்குறுதியளித்துள்ளனர். இந்த அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலியை வழங்குவானாக! அவர்களது பொருள்களிலும், ஆன்மாக்களிலும் அளவற்ற அருள்களை வழங்குவானாக!

எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். பள்ளிவாயில்கள் நமது தர்பிய்யத்திற்கும் தப்லீகிற்கும் மிகவும் அவசியமானதாகும். எனவேதான் நான் அமீர் சாஹிப் அவர்களிடம் நீங்கள் சிறிய பள்ளிவாயிலைக் கட்டுங்கள். ஆனால், ஒவ்வொரு ஜமாஅத்திலும் பள்ளிவாயிலைக் கட்ட முயற்சி செய்யுங்கள் என்று கூறியிருந்தேன்.

நாம் சிறிய பள்ளிவாயிலைக் கட்டுவதற்காக திட்டமிட்டிருந்தாலும் எல்லா இடங்களிலும் உடனடியாக பள்ளிவாயிலை கட்டும் வகையில் நமக்கு வசதிகள் இல்லை. எனவே, தன்னார்வத் தொண்டர்கள் பள்ளிவாயில் கட்டுவதற்கும் கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கும் முன் வந்திருப்பதன் மூலம் ஒரு நல்ல மரபை அவர்கள் நிலைநாட்டியுள்ளனர். இதனை அவர்கள் தொடர்ந்து செய்து வர வேண்டும். இயன்றவரை தொகையை மிச்சப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ்வின் அருளால் ஆப்பிரிக்காவிலும் இத்தகைய பல மக்கள் உள்ளனர். அவர்கள் பெரும் பெரும் பள்ளிவாயில்களைக் கட்டித் தருகின்றனர்.

இந்த ஸக்காத்தை செலுத்துகின்ற கடமை எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் இருக்கின்றது. இதற்கென்று ஒரு வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை பெருமானார் (ஸல்) அவர்கள் தமது காலத்திலிருந்தே நிர்ணயம் செய்துள்ளார்கள்.

பிறகு ஸக்காத்து கொடுப்பதிலும் உங்களது செல்வத்தை தூய்மைப்படுத்துவதிலும் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் அதனோடு தொடர்புடைய பணிகளுக்காகவும் நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு செலவும் அடங்கும்.

நம்பிக்கை அளவிலும், கொள்கை அளவிலும் உறுதியாக இருப்பவர்களும் செயல் ரீதியாக முன்னேறுவர்களும்தான் பள்ளிவாயில்களை நிரப்ப முடியும். எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கும், கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்களுக்கும் இந்த கடமை இருக்கின்றது. அதாவது, தங்களது வருகையின் மூலமாக பள்ளிவாயிலை நிரப்புவதை கட்டாயமானதாக அவர்கள் ஆக்கிக் கொள்ள வேண்டும். ஜமாஅத் செய்துள்ள பொருள் தியாகம் மற்றும் நேரத்தின் தியாகம் ஆகியவற்றிலிருந்து நிரந்தரமான நற்கூலியைப் பெறுவதற்காக பொறுப்பாளர்களுக்கும் ஒவ்வோர் அஹ்மதிக்கும் இப்போது உங்களது எண்ணிக்கையை விட மூன்று மடங்கு பெரியதாக இருக்கக்கூடிய இந்தப் பள்ளிவாயிலை சிறியதாக்குவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். பள்ளிவாயில் எப்போது சிறியதாகும் என்றால் அதில் தொழுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக வேண்டும். ஜமாஅத்தின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். ஜமாஅத்தின் எண்ணிக்கையை அதிகரிக்க தப்லீக் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். இன்னும் சொல்வதென்றால், இது மிகவும் அவசியமானதாகும்.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **கனடாவின் ரெஜினா (Regina) பள்ளிவாயிலில்** **4 நவம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **4 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

அல்ஹம்துலில்லாஹ். அஹ்மதிய்யா ஜமாஅத் ரெஜினாவிற்கும் அல்லாஹ் பள்ளிவாயிலைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். இது மிகவும் அழகிய பள்ளிவாசலாகும் – மாஷா அல்லாஹ். இப்போது இங்குள்ள ஜமாஅத் நபர்களின் எண்ணிக்கை அருகிலுள்ள பகுதிகளில் உள்ளவர்களையும் சேர்த்துப் பார்க்கும் போது ஏறக்குறைய 160 பேர் ஆகும். என்னிடம் கூறப்பட்டதற்கிணங்க பள்ளிவாயிலிலுள்ள ஹாலில் 400 பேர்கள் தொழ முடியும். தேவைப்பட்டால் Common Area –விலும் மேலும் 100 பேர்கள் தொழ முடியும். இப்போது ஜமாஅத்தில் உள்ள நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்க்கும்போது இந்த

பள்ளிவாயில் தற்போதுள்ள தேவையை விட மூன்று மடங்கு பெரியதாகும். இதற்கான செலவுகளையும் உள்ளூர் ஜமாஅத்தே செலுத்தியுள்ளது என்று என்னிடம் கூறப்பட்டது அல்லது அதனை செலுத்துவதாக அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளனர். இன்னும் சொல்வதென்றால், முழு செலவில் ரொக்கத் தொகையின் அடிப்படையில் பார்க்கும்போது அதில் மூன்றில் ஒரு பகுதியை இரண்டு சகோதரர்கள் செலுத்துவதாகப் பொறுப்பேற்றுள்ளனர். அதில் ஒருவர் நமது டாக்டர் ஷம்சுல் ஹக் ஷஹீது அவர்களின் மனைவி ஆவார்.

ரொக்கத் தொகையின் அடிப்படையில் என்று நான் கூறக் காரணம், பள்ளிவாயிலைக் கட்டுவதற்கான பணி ஆரம்பமானபோது Contractor –களுடன் தொடர்பு ஏற்பட்டபோது குறைந்தபட்ச Tender கூட 2.8 மில்லியனாக இருந்தது என்று கூறுகின்றனர். மற்ற செலவுகளையும் சேர்த்து 3.5 மில்லியன் டாலர்கள் வரை செலவாகும் என்று கூறப்பட்டது. ஆனால், பள்ளிவாயிலைக் கட்டுவதற்கும் அதை முழுமைப்படுத்துவற்கும் ஆன மொத்த செலவு 1.6 மில்லியன் டாலர்கள் ஆகும். இப்போது ஓர் உலகவாதி இந்த விஷயத்தைக் கேட்டு வியப்படைவார். Contractor –களின் குறைந்தபட்ச Tender உடன் ஒப்பிடுகையில் அதை விட பாதிக்கும் மேலாக குறைவான செலவில் பள்ளிவாயில் கட்டப்பட்டிருக்கின்றது. இது எப்படி சாத்தியமாகும்? என்று அவர்கள் வியப்படைகின்றனர். நிச்சயமாக ஓர் உலகவாதியால் அதைக் கணிக்க முடியாது. ஏனென்றால், அவருக்கு தியாகம் என்றால் என்னவென்பது தெரியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத் தியாகத்தின் எத்தகைய தரத்தை நிலைநாட்டியுள்ளது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. உயிர், பொருள், நேரம் ஆகியவற்றை தியாகம் செய்கின்ற முன்னுதாரணங்களை நாம் பார்க்கின்றோம். அவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திலேயே நமக்கு தென்படுகின்றன. இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இயல்பாகும். எல்லா இடங்களிலும் இந்த இயல்பு இருக்கின்றது. பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளானாலும் சரி, அவர்கள் உயிர் மற்றும் பொருள் தியாகங்களைச் செய்பவர்களாக இருக்கின்றனர். அவர்கள் ஆப்பிரிக்காவில் வசிக்கின்ற அஹ்மதிகளானாலும் சரி, அந்த அஹ்மதிகளிடம் பொருள் இல்லையென்றாலும் அவர்கள் நேரத்தைச் செலவு செய்தவாறு தங்களிடம் எது இருக்கின்றதோ அதைக் கொடுத்து பள்ளிவாயில்களைக் கட்டுவதற்கும் ஜமாஅத் பணிகளுக்கும் அவர்கள் தங்களை அர்ப்பணிக்கின்றனர். அவர்கள் இந்தோனேஷியாவில் வசிக்கின்ற அஹ்மதிகளானாலும் சரி அல்லது ஐரோப்பாவில் வாழ்கின்ற அஹ்மதிகளானாலும் சரி அல்லது இங்கு கனடாவில் வசிக்கின்ற அஹ்மதிகளானாலும் சரி அல்லது உலகில் எந்தவொரு பகுதியில் வாழும் அஹ்மதியானாலும் சரி அவர்களுக்கு அல்லாஹ் தியாகங்கள் செல்வதற்கான நல்வாய்ப்பினை வழங்குகின்றான். ஏனென்றால், அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதை தனது குறிக்கோளாக ஆக்கியுள்ளனர்.

இந்த பள்ளிவாயிலைக் கட்டுவதில் ஜமாஅத்தின் பணம் பாதிக்கும் மேல் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது என்று எனக்கு கூறப்பட்டது. சிஸ்காடூனைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் கட்டுமானப் பணிகளில் தன்னார்வத் தொண்டர்களாக தொண்டாற்றி உள்ளனர். இவ்வாறே இந்தத் தொகையை அவர்கள் மிச்சப்படுத்தி உள்ளனர். இவ்வாறே மற்ற தன்னார்வத் தொண்டர்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த சகோதரர்களின் Contractor –க்கு ஒரு நாளாவது Contractor மூலமாகவும் உதவி கிடைத்துள்ளது. அவரை ஒருவேளை அல்லாஹ் இந்த பணிக்காகவே அனுப்பி வைத்துள்ளான். இவர் Toronto –விலிருந்து வந்துள்ளார். அங்கு அவரது பணி முடிவடைந்த பிறகு இங்கு அவர் வந்துள்ளார். எந்நிலையிலும் இவர்கள் அனைவரும் சேர்ந்தே இப்பணியைச் செய்துள்ளனர். மற்ற தன்னார்வத் தொண்டர்களும் இதில் ஈடுபட்டுள்ளனர். அதில் ரெஜினாவிலுள்ள உள்ளூர்வாசிகளும் அடங்குவர். இதைத் தவிர சிஸ்காடூனிலிருந்தும், கல்கேரியிலிருந்தும், அட்மிண்டனிலிருந்தும் மக்கள் வந்துள்ளனர். பிறகு Toronto –விலிருந்தும் வந்துள்ளனர். இவர்களில் குத்தாம்களும் உள்ளனர். அன்ஸார்களும் உள்ளனர். தொழில் ரீதியாக ஜமாஅத்தில் திறமை பெற்றவர்கள் இல்லாத நிலையிலும் இந்த பணிகளைத் தவிர மற்ற எல்லா பணிகளையும் Contractor –களும் தன்னார்வத் தொண்டர்களுமே செய்துள்ளனர். உலகவாதியான Contractor இதை சிந்தித்துப் பார்க்க முடியாது. ஆனால், இந்த மக்கள் தங்களது பணத்தையும், நேரத்தையும் செலவு செய்வதை சிறிதும் பொருட்படுத்தவில்லை. இவ்வாறே லஜ்னாவும் இந்த தன்னார்வத் தொண்டர்களுக்கான உணவிற்கான ஏற்பாட்டைச் செய்து பொருள் தியாகத்தைத் தவிர இந்த தொண்டையும் செய்து இப்பணியில் பங்கு பெற்றுள்ளனர்.

ஏறக்குறைய 41,500 மணி நேரம் இந்தப் பள்ளிவாயிலைக் கட்டுவதற்காக தன்னார்வத்துடன் இவர்கள் செலவு செய்துள்ளனர். சிலர் 8 மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டும் அல்லது 5 நாட்கள்தான் வேலை செய்ய வேண்டும் என்பதைப் பார்த்திருக்க மாட்டார்கள். மாறாக, எனது எண்ணத்திற்கேற்ப பலரும் இரவு, பகல் என்று பாராமல் பல மணி நேரங்கள் வேலை செய்திருப்பார்கள். 7 நாட்கள் வரை பணியில் ஈடுப்பட்டிருப்பார்கள். ஒரு குறிப்பிட்ட நேரம் வரைதான் பணி செய்ய வேண்டும் என்றெல்லாம் அவர்கள் கருதவில்லை.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று இந்த உணர்வு அஹ்மதிகளிடம் எல்லா இடங்களிலும் தென்படுகின்றது. ஒரு பக்கம் சில முஸ்லிம்கள் உலகில் அமைதியின்மையைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ளனர். மறுபுறம் முன்னேற்றமடைந்த உலக முன்னுரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற அத்தகைய ஒரு நாட்டில் வாழ்கின்ற அஹ்மதிகள் அல்லாஹ்வின் வீட்டைக் கட்டுவதற்காக தங்களது பொருளையும், நேரத்தையும் அர்ப்பணிக்கின்றனர். ஏனென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எவர் அல்லாஹ்வின் வீட்டைக் கட்டுகின்றாரோ அவர் சொர்க்கத்தில் தனக்கென்று ஒரு வீட்டைக் கட்டுகின்றார் என்று கூறியுள்ளார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுஸ் ஸலாத் பாபு மன் பனா மஸ்ஜிதன் ஹதீஸ் எண் 450) மேலும், இக்காலத்தின் இமாமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை அடியார் அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து, நீங்கள் இஸ்லாத்தின் அழகான தூதுச் செய்தியை உலகில் பரப்புவதற்காக, இஸ்லாத்தின் உண்மையான மற்றும் அழகான நிழற்படத்தைக் காட்டுவதற்காக பள்ளிவாயிலைக் கட்டுங்கள் என்று கூறியுள்ளார்கள்.

எனவே, இந்தப் பள்ளிவாயிலைக் கட்டுவதற்காக தியாகம் செய்வதன் மூலம் எங்கு இறைவனின் திருப்தியை நாம் பெறுகின்றோமோ அங்கு இஸ்லாம் தொடர்பான தவறான எண்ணங்களை உலகின் மூளையிலிருந்து அகற்றுபவர் –களாகவும் நாம் இருக்கின்றோம். முஸ்லிம்களின் பள்ளிவாயிலும் இஸ்லாத்தின் போதனையும் உலகில் குழப்பத்தையும் அழிவையும் ஏற்படுத்துவதற்குரிய வழியல்ல. மாறாக, அது உலகம் மற்றும் மறுமையின் நன்மைக்கான வழியாகும் என்பதை உலகிற்கு நீங்கள் எடுத்துக் கூறுங்கள். அல்லாஹ்வின் அன்பை உள்ளத்தில் நிலைநாட்டுவதற்கும், அவனுக்குரிய உரிமையை செலுத்துவதற்குமுள்ள ஒரு வழியாக அது இருக்கின்றது என்பதை உலகிற்கு எடுத்துக் கூறுங்கள். அல்லாஹ்வின் படைப்பினங்கள் மீது அன்பு செலுத்தி அதற்குரிய உரிமையைச் செலுத்துவதற்கான ஒரு வழியாக அது இருக்கின்றது என்பதை உலகிற்கு எடுத்துக் கூறுங்கள்.

இந்தப் பள்ளிவாயிலைக் கட்டியதன் மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத் கனடாவிற்கு முதல் முறையாக இந்தப் பெருமையும் கிடைத்திருக்கின்றது. அதாவது, பெரும்பாலான அஹ்மதி தன்னார்வத் தொண்டர்கள் பணி செய்து ஜமாஅத்தின் தொகையை மிச்சப்படுத்தியுள்ளனர். உலகின் மற்ற இடங்களிலும் இவ்வாறு பணி நடக்கின்றது. ஆனால், இங்கு முதன் முறையாக இப்போதுதான் இவ்வாறு நடந்துள்ளது. அல்லாஹ் தியாகம் செய்த அனைவருக்கும் அவர்கள் பொருளைத் தியாகம் செய்தவர்களாக இருந்தாலும் சரி, நேரத்தை தியாகம் செய்தவர்களாக இருந்தாலும் சரி, ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவருமே பெரும் பெரும் தொகையை இதற்காக செலுத்தியுள்ளனர் அல்லது இதற்காக வாக்குறுதியளித்துள்ளனர். இந்த அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலியை வழங்குவானாக! அவர்களது பொருள்களிலும், ஆன்மாக்களிலும் அளவற்ற அருள்களை வழங்குவானாக!

எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். பள்ளிவாயில்கள் நமது தர்பிய்யத்திற்கும் தப்லீகிற்கும் மிகவும் அவசியமானதாகும். எனவேதான் நான் அமீர் சாஹிப் அவர்களிடம் நீங்கள் சிறிய பள்ளிவாயிலைக் கட்டுங்கள். ஆனால், ஒவ்வொரு ஜமாஅத்திலும் பள்ளிவாயிலைக் கட்ட முயற்சி செய்யுங்கள் என்று கூறியிருந்தேன். அவர்களும் என்னிடம் இதுவே எங்களது நிகழ்ச்சியாகவும் முயற்சியாகவும் இருக்கும். அதாவது நாங்கள் அதிகமாக சின்னச்சின்ன பள்ளிவாயிலை கட்டுவோம் என்று கூறியுள்ளார்கள். ஆனால், நான் இதையும் கூற விரும்புகின்றேன். நாம் சிறிய பள்ளிவாயிலைக் கட்டுவதற்காக திட்டமிட்டிருந்தாலும் எல்லா இடங்களிலும் உடனடியாக பள்ளிவாயிலை கட்டும் வகையில் நமக்கு வசதிகள் இல்லை. எனவே, தன்னார்வத் தொண்டர்கள் பள்ளிவாயில் கட்டுவதற்கும் கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கும் முன் வந்திருப்பதன் மூலம் ஒரு நல்ல மரபை அவர்கள் நிலைநாட்டியுள்ளனர். இதனை அவர்கள் தொடர்ந்து செய்து வர வேண்டும். இயன்றவரை தொகையை மிச்சப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

ஓரிடத்தில் பள்ளிவாயிலைக் கட்டுவது தொடர்பான முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த சமயத்தில் நமது ஜமாஅத்திற்கு பள்ளிவாயில்களின் பெரும் தேவை இருக்கின்றது. இது இறைவனின் இல்லமாக இருக்கின்றது. எந்த நகரத்தில் அல்லது கிராமத்தில் நமது ஜமாஅத்தின் பள்ளிவாயில் நிலைநாட்டப்பட்டு விட்டதோ அங்கு ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டு விட்டது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். முஸ்லிம்கள் குறைவாக இருக்கின்ற அத்தகைய ஒரு நகரமோ, கிராமமோ இருந்தால் அல்லது முஸ்லிம்களே இல்லாமல் இருந்தால் அங்கு இஸ்லாம் முன்னேற வேண்டுமென்றால் அங்கு ஒரு பள்ளிவாயிலைக் கட்டி விட வேண்டும். பிறகு சுயமே அல்லாஹ் முஸ்லிம்களை ஈர்த்து அங்கு கொண்டு வருவான். ஆனால், இதற்கு ஒரு நிபந்தனை இருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள இந்த நிபந்தனையை நாம் கண்முன் நிறுத்த வேண்டும். அன்னார் கூறுகின்றார்கள்: அந்த நிபந்தனை இதுவாகும். அதாவது, பள்ளிவாயிலைக் கட்டுவதற்கு கலப்பற்ற நல்லெண்ணம் இருக்க வேண்டும். ஆக, இதுவே பள்ளிவாயில் கட்டுவதற்கு அவர்கள் கூறியுள்ள நிபந்தனையாகும். முழுக்க முழுக்க அல்லாஹ்விற்காக அதை

கட்ட வேண்டும். சுய நோக்கங்களுக்கோ அல்லது வேறு எந்தவொரு தீங்கிற்கும் ஒருபோதும் அதில் இடமளிக்கக்கூடாது. அப்போதுதான் இறைவன் பரக்கத்தை வழங்குவான். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 119; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, ஹஸ்ரத் வாக்களிக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும். ஆனால், அத்துடன் இந்த நிபந்தனையையும் கண்முன் நிறுத்த வேண்டியது அவசியமானதாகும். அதனை ஹஸ்ரத் வாக்களிக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். அதாவது, கலப்பற்ற மனத்தூய்மையுடன் இந்தப் பணியைச் செய்ய வேண்டும். தற்காலிக உணர்வாக மட்டும் அது இருக்கக் கூடாது. நல்ல பள்ளிவாயிலைக் கட்டுவது மட்டுமே குறிக்கோளாக இருக்கக் கூடாது. மாறாக, பள்ளிவாயில் கட்டப்படுவதற்கான நோக்கங்களை நிறைவேற்றுவது அவசியமானதாகும். பெயருக்காகவும், புகழுக்காகவும் மட்டும் பள்ளிவாயிலைக் கட்டக்கூடாது. இந்த அளவு பொருள் தியாகம் செய்துள்ளோம் என்பதைக் காட்டுவதற்காக மட்டும் பள்ளிவாயிலைக் கட்டக் கூடாது அல்லது இத்தனை மணி நேரம் செலவு செய்துள்ளோம் என்பதைக் காட்டுவதற்காகவும் அதைக் கட்டக் கூடாது அல்லது ஏதாவதொரு போட்டியின் காரணமாகவும் அதைக் கட்டக் கூடாது. மாறாக, முழுக்க முழுக்க அல்லாஹ்விற்காக பள்ளிவாயிலைக் கட்ட வேண்டும்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று இந்த மூன்று சகோதரர்களும் அவர்களது Contractor –ம் நான்காவதாக ஒரு Contractor –ம் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். பள்ளிவாயிலைக் கட்டுவதில் இவர்கள் அதிகமாக பங்கு பெற்றுள்ளனர். இவர்கள் நேற்று என்னை சந்திக்கவும் செய்தனர். அல்லாஹ் அவர்களுக்கு இந்த நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். மேலும், இந்த நற்கூலியிலும் அவர்கள் பங்கு பெற்றுள்ளனர் என்பதில் அவர்கள் மகிழ்ச்சி அடைந்திருந்தனர். இப்போது அல்லாஹ் அவர்களுக்கு மேலும் பல Contract –களையும் வழங்கியுள்ளான். அல்லாஹ் வழங்காமல் விட்டு விடுவதில்லை. சில நேரங்களில் விரைவாக வழங்குகின்றான். சில நேரங்களில் தாமதமாக வழங்குகின்றான்.

இன்னும் சொல்வதென்றால், இந்த சகோதரர்களில் ஒருவரான மன்சூர் சாஹிப் அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள். ஒரு பையன் பல்கலைக் –கழகத்தில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தான். அதனால் இந்தப் பணியைச் செய்ய அவன் மறுத்து விட்டான். அப்போது அவனுக்கு கனவில் இந்தப் பள்ளிவாயிலின் பணியைச் செய்வதற்காக Contractor –களுக்கு உனது தேவை இருக்கின்றது என்பது காட்டப்பட்டது. பிறகு அவன் தொடர்பு கொண்டு இங்கு பணி செய்ய ஆரம்பித்து விட்டான். இந்தக் காலகட்டத்தில் அவரது பொருளாதார நிலையும் மேசமாகிக் கொண்டே இருந்தது. ஒரு நாள் அவரது மனைவி அவரிடம் குடும்ப செலவிற்கு பணமில்லை என்று கூறினாள். அல்லாஹ் அவருக்கு எவ்வாறு வழங்கினான் என்றால் அதே நாளிலோ அல்லது அதற்கு அடுத்த நாளிலோ வரி வாங்குபவர்கள் இது நீங்கள் அதிகப்படியாக செலுத்திய தொகையாகும் என்று கூறி அவருக்கு தொகையை வழங்கினர். இவ்வாறு அந்த தொகை திரும்ப அவருக்கு கிடைத்தது. பிறகு Child Benifit தரப்பிலிருந்தும் தொகை வந்தது. இவ்வாறு அவருக்கு 13 அல்லது 14 ஆயிரம் டாலர்கள் கிடைத்தன. எனவே, நன்மை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் நிபந்தனையாகும். பிறகு அல்லாஹ் வழங்கவும் செய்கின்றான்.

அல்லாஹ்வின் அருளால் ஆப்பிரிக்காவிலும் இத்தகைய பல மக்கள் உள்ளனர். அவர்கள் பெரும் பெரும் பள்ளிவாயில்களைக் கட்டித் தருகின்றனர். எனக்கு நினைவில் இருக்கின்றது. நான் கானாவில் இருந்த சமயத்தில் ஒரு நகரத்தில் சிறிது காலம் வசித்து வந்தேன். அதற்கு கொயிட்டாமாலா என்று பெயர். அங்கு நமது ஜமாஅத்தின் சிறிய பள்ளிவாயில் ஒன்று இருந்தது. பூசப்படாத பிளாக்குகளுள்ள பள்ளிவாயிலாக அது இருந்தது. அதற்கு உள்ளேயும் வெளியேயும் பிலாஸ்டர் செய்து அதை வலுப்படுத்த முயற்சி செய்யப்பட்டது.

கிலாஃபத் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு நான் முதன் முறையாக கானாவிற்கு சுற்றுப் பயணம் செய்தபோது கொயிட்டாமாலாவிற்கும் சென்றிருந்தேன். அங்கு இரண்டு மாடிகளைக் கொண்ட மிகப்பெரும் பள்ளிவாயில் ஒன்று இருப்பதைக் கண்டேன். இங்கு இருக்கின்ற உங்களது இந்த பள்ளிவாயிலை விட அது மூன்று மடங்கு பெரியதாகும். அந்த பள்ளிவாயிலுடன் அலுவலகங்களும் இருந்தன. நமது அஹ்மதி சகோதரர் ஒருவர் இவை அனைத்தையும் கட்டுவதற்கான செலவை தானே ஏற்றுக் கொண்டார் என்று என்னிடம் கூறப்பட்டது. இது அவருக்கு எளிதான காரியமல்ல என்பதும் எனக்குத் தெரியும். மூன்று நான்கு வருடங்களுக்குள் அவர்கள் இதற்கான தொகையைச் செலுத்தியுள்ளார். எந்நிலையிலும் இவற்றையெல்லாம் நானே செய்து முடிப்பேன் என்று அவர் கூறினார்; செய்தும் காட்டினார்.

நான் ஏற்கனவே கூறியது போன்றே இந்த இயல்பு அஹ்மதிகளிடம் எல்லா இடங்களிலும் தென்படுகின்றது. ஆப்பிரிக்க மக்கள் தொடர்பாக ஒருவேளை வறுமையின் காரணமாக அவர்களிடம் பேராசை இருக்கின்றது என்று கருதப்படுகின்றது. ஆனால், பணம் வரும்போது தியாகங்களின் எத்தகைய தரத்தை அவர்கள் நிலைநாட்டுகின்றார்களோ அதுபோன்ற தரத்தை மிகக் குறைவாகத்தான் நம்மால் பார்க்க முடிகின்றது. இறைவனுடைய வீட்டைக் கட்ட வேண்டும். அதற்காக தியாகங்கள் செய்ய வேண்டும் என்ற இயல்பு எல்லா இடங்களிலும் தென்படுகின்றது. பாகிஸ்தானில் நம்மால் பள்ளிவாயில்களைக் கட்ட முடியாது. அங்குள்ள மக்கள் அமைதியிழந்த நிலையில் சில நேரங்களில் இது தொடர்பாக எனக்கு கடிதங்கள் எழுதுகின்றனர். அங்குள்ள சட்டத்தின் காரணமாக எங்களால் பள்ளிவாயிலைக் கட்ட முடியாது. குறைந்தபட்சம் நாங்கள் ஒன்று சேர்ந்து தொழுவதற்காக ஒரு ஹால் எங்களுக்கு கிடைக்க துஆ செய்யுங்கள் என்று அவர்கள் எழுதுகின்றனர். மினாரா அல்லது கலசம் கட்டுவது மிகத் தொலைவிலுள்ள ஒரு விஷயமாகும். பள்ளிவாயிலுக்கான சாதாரண மிஃராபைக் கூட அவர்களால் கட்ட முடியாது. ஓர் அறையைக் கட்டி அதற்கு முன்னால் மிஃராபை அமைத்துக் கொள்ளக் கூட அவர்களுக்கு முடியாது. அங்கு எந்த அளவு கடினம் காட்டப்படுகிறது என்றால் கிப்லாவின் திசையை நோக்கி இருக்கின்ற எந்தவொரு கட்டிடத்தையும் கூட அங்கு நம்மால் கட்ட முடியாது. ஆனால், அல்லாஹ் நமக்கு வெளிநாடுகளில் எந்த அளவுக்கு வழங்குகின்றான் என்றால் அது நமது கற்பனை மற்றும் நமது முயற்சிகளை விட அதிகமாக இருக்கின்றது.

அதாவது அதிகமாக அல்லாஹ் வழங்குகின்றான். பள்ளிவாயில்களைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குகின்றான். எனவே, அல்லாஹ்வின் இந்த அருள்களைப் பார்த்து அவனுக்கு நன்றி செலுத்தும் உணர்வால் நமது உள்ளங்கள் நிரம்பி இருக்கின்றன. இன்று இங்கு வசிப்பவர்களும் கூட அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதில் முன்னேறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு ஒரு பள்ளிவாயிலை வழங்கியுள்ளான். எத்தகைய ஒரு வீட்டை வழங்கியுள்ளான் என்றால் அது அல்லாஹ்வின் வீடாக இருக்கின்றது. அது ஏக இறைவனை வணங்குவதற்காக அமைக்கப்பட்டிருக் –கின்றது. இது அல்லாஹ்வின் வீடு என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அல்லாஹ் இந்த வீட்டை தனது பயனுக்காக உருவாக்கவில்லை. இதன் பலனும் இந்தப் பள்ளிவாயில்களுக்கு வருபவர்களுக்குத்தான் கிடைக்கின்றது.

எனவே, இது அல்லாஹ்வின் பேருபகாரமாகும். இதற்காக நாம் அவனுக்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் அது குறைவுதான். பள்ளிவாயில் கட்டப்படுவதற்காக நன்றி செலுத்தும் வழிமுறையை அல்லாஹ் நமக்கு கற்றுத் தந்துள்ளான். அது நான் ஓதிய வசனத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். அந்த வசனத்தின் பொருள் இதுவாகும். அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு தொழுகைகளை நிலைநாட்டி, ஸக்காத்து கொடுத்து அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் அஞ்சாதவர் மட்டுமே அல்லாஹ்வின் பள்ளிவாயில்களை நிரப்புபவர்கள் ஆவர். இத்தகையவர்களே விரைவில் நேர்வழி பெற்றவர்களாக இருப்பர். (9:18)

அல்லாஹ்வின் மீதம் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொள்வது ஒருவர் நம்பிக்கை கொண்டவராகவும் முஸ்லிமாகவும் இருப்பதற்கான அடிப்படை நிபந்தனையாகும். இது மிகவும் அவசியமானதாகும்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: தொழுகையை நிலைநாட்டுவதும் அவசியமானதாகும். தொழுகையை நிலைநாட்டுவது என்றால் என்ன? ஐந்து வேளையும் நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில் ஜமாஅத்தாகத் தொழுவதற்கு வருவதாகும். தொழுகையை நிலைநாட்டுவது என்பதன் பொருளே ஜமாஅத்தாகத் தொழுவதாகும்.

பிறகு ஸக்காத்தும் கொடுக்க வேண்டும். ஸக்காத் என்பது என்ன? இது நமது செல்வங்களை இறைவனது வழியில் செலவு செய்து அதனை தூய்மைப்படுத்துவதாகும். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகளில் இந்த தியாகத்திலும் முன்னேறி வருகின்றனர். ஆனால், தொழுகைக்குச் செல்வதிலும், ஜமாஅத்தாக தொழுவதிலும் சோம்பேறித்தனம் எல்லா இடங்களிலும்


## சுத்தமான தேன் கிடைக்கும்

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**
B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)
Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284


## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)


**A. பஷீர் அஹ்மது**
வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

காணப்படுகிறது. இது ஓர் அடிப்படையான விஷயமாகும். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

ஸக்காத் தொடர்பாக இதையும் நான் கூற விரும்புகின்றேன். இதில் பொதுவாக நாம் செலுத்தும் ஸக்காத்தும் அடங்கும். இது செல்வந்தராக இருக்கின்ற ஒவ்வொரு நபர் மீதும் கடமையாகும். அவரது பணம் வங்கியில் இருக்கின்றது என்றால் அல்லது அவரிடமே இருக்கின்றது என்றால் முழு வருடமும் பெருந்தொகை அவரிடம் இருந்து வருகின்றது என்றால் அதற்கான ஸக்காத்தை செலுத்துவது அவர் மீது கடமையாகும். எவரிடம் தங்கம் இருக்கின்றதோ, வெள்ளி இருக்கின்றதோ அவர்கள் மீதும் ஸக்காத் கடமையாகும். பிறகு பெரும் பெரும் டைரி ஃபார்ம் யாரிடம் இருக்கின்றதோ அவர் மீதும் ஸக்காத் கடமை ஆகின்றது. இந்த ஸக்காத்தை செலுத்துகின்ற கடமை எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் இருக்கின்றது. இதற்கென்று ஒரு வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை பெருமானார் (ஸல்) அவர்கள் தமது காலத்திலிருந்தே நிர்ணயம் செய்துள்ளார்கள். ஸக்காத்து செலுத்துவதில் பெண்களும் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும் என்பதை நான் கூற விரும்புகின்றேன். இங்கு வந்த பிறகு இவர்களது நிலைமை மேம்பட்ட பிறகு இவர்களிடம் அதிகமாக தங்க நகைகள் உள்ளன. பெரிய வயதிலுள்ள மற்றும் சிறிய வயதிலுள்ள பெண்களில் பெரும்பாலாரை நான் பார்த்துள்ளேன். அவர்கள் மிகவும் பெரிய கம்மல்களையும் தங்க வளையல்களையும் அணிந்துள்ளனர். சந்தேகமின்றி இதனை நீங்கள் அணியலாம். இது உங்களுக்கு அழகு சேர்க்கக் கூடியதாகும். அல்லாஹ்வும் இதனை அனுமதித்துள்ளான். ஆனால், அதற்கு ஸக்காத்து செலுத்துவதும் உங்கள் மீது கடமையாகும்.

பிறகு ஸக்காத்து கொடுப்பதிலும் உங்களது செல்வத்தை தூய்மைப்படுத்துவதிலும் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் அதனோடு தொடர்புடைய பணிகளுக்காகவும் நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு செலவும் அடங்கும். அடியார்களுக்குரிய உரிமையைச் செலுத்துவதற்காகவும் இது செலவு செய்யப்படுகின்றது. இப்போது அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் தான் மார்க்கத்தைப் பரப்புவதற்காக தமது செல்வத்தைச் செலவு செய்கின்றது. பள்ளிவாயில்களைக் கட்டுவது, பிரச்சார நிலையங்களைக் கட்டுவது, முபல்லிக்மார்களின் அமைப்பு, பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றிற்காக இவை செலவு செய்யப்படுகின்றன.

ஸக்காத்திற்குப் பிறகு அடுத்து அல்லாஹ் நமக்கு வழங்கியிருக்கும் கட்டளை அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் நீங்கள் அஞ்சக்கூடாது என்பதாகும். அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் இருந்தால்தான் மனிதன் பல தீமைகளிலிருந்தும் தவிர்ந்திருக்க முடியும். இந்த நாடுகளில் சுதந்திரம் என்ற பெயரில் பல தீமைகளும் இருக்கின்றன. இறையச்சத்தின் மூலமாகவே அதிலிருந்து நாம் விலகியிருக்க முடியும். நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் உள்ளத்தில் உருவாக வேண்டியது மிகவும் அவசியமானதாகும். இறைவன் மீதுள்ள அச்சமே தக்வா ஆகும். தக்வா தொடர்பாக திருக்குர்ஆனில் எண்ணற்ற வசனங்கள் உள்ளன. அதில் நமக்கு பல்வேறு கட்டளைகள் தரப்பட்டுள்ளன. இந்த விஷயங்களுக்கேற்ப நமது செயல்கள் இருந்தால் நீங்கள் அல்லாஹ்வின் பார்வையில் நேர்வழி பெற்றவர்களில் ஒருவராக ஆக முடியும் என்பதை புரிந்து கொள்ளுங்கள். பள்ளிவாயில்களை நிரப்புவதற்கான நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக நீங்கள் ஆக முடியும். இந்த செயலும் இந்த ஈமானில் உறுதியாக நிலைத்திருப்பதுதான் பள்ளிவாயில் கட்டப்படுவதற்கான நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றக் கூடியதாக இருக்கின்றது. இந்த விஷயம்தான் இறைவனுக்கு நன்றி செலுத்துபவர்களாக நம்மை ஆக்குகின்றது. நாம் அது அல்லாமல் பள்ளிவாயிலைக் கட்டி விட்டோம். தொழுகைக்காக எப்போதாவது வந்தோம் என்ற விஷயத்தினால் மட்டும் நீங்கள் மகிழ்ச்சி அடைந்தால், இறைவனை விட அதிகமாக அடியார்களுக்கு அஞ்சுபவர்களாக நீங்கள் இருந்தால், உலகின் மீதுள்ள பேராசையும் உலகின் முன்னுரிமைகளும் மார்க்கத்தையும் அதன் கடமைகளையும் நாம் மறந்து விடும் வகையில் அது செய்து விட்டால், பிறகு ஒருவேளை ஒரு தற்காலிக நற்கூலியை வேண்டுமானால் அதன் மூலமாக அந்த நபர் சம்பாதித்து இருக்கலாம். ஆனால், அல்லாஹ்வின் நிரந்தரமான அருள்களிலிருந்து தொலைவில் சென்று விடுபவர்களாக நீங்கள் ஆகி விடுவீர்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கை அளவிலும், கொள்கை அளவிலும் உறுதியாக இருப்பவர்களும் செயல் ரீதியாக முன்னேறுவர்களும்தான் பள்ளிவாயில்களை நிரப்ப முடியும். எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கும், கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்களுக்கும் இந்த கடமை இருக்கின்றது. அதாவது, தங்களது வருகையின் மூலமாக பள்ளிவாயிலை நிரப்புவதை கட்டாயமானதாக அவர்கள் ஆக்கிக் கொள்ள வேண்டும். ஜமாஅத் செய்துள்ள பொருள் தியாகம் மற்றும் நேரத்தின் தியாகம் ஆகியவற்றிலிருந்து நிரந்தரமான நற்கூலியைப் பெறுவதற்காக பொறுப்பாளர்களுக்கும் ஒவ்வோர் அஹ்மதிக்கும் இப்போது உங்களது எண்ணிக்கையை விட மூன்று மடங்கு பெரியதாக இருக்கக்கூடிய இந்தப் பள்ளிவாயிலை சிறியதாக்குவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். பள்ளிவாயில் எப்போது சிறியதாகும் என்றால் அதில் தொழுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக வேண்டும். ஜமாஅத்தின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். ஜமாஅத்தின் எண்ணிக்கையை அதிகரிக்க தப்லீக் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். இன்னும் சொல்வதென்றால், இது மிகவும் அவசியமானதாகும். பள்ளிவாயிலைக் கட்டியதற்காக அல்லாஹ்வுக்கு இவ்வாறு நீங்கள் நன்றி செலுத்துங்கள்.

அதாவது, உண்மையான இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை இங்கு வசிக்கின்ற ஒவ்வொரு நபருக்கும் எட்ட வையுங்கள். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதுடன் இந்த செயலானது மக்களுக்குரிய உரிமையைச் செலுத்துவதாகவும் இருக்கின்றது. இது இந்த மக்களுக்குள்ள உரிமையாகும். அதாவது, நாம் இவர்கள் வரை இஸ்லாத்தின் உண்மையான போதனையை எட்ட வைக்க வேண்டும். இவர்களை அசுத்தங்களிலிருந்தும் அழுக்குகளிலிருந்தும் வெளியில் கொண்டு வர வேண்டும். உலகிற்கு அதனை உண்மையில் படைத்தவனைப் பற்றி தெரிவிக்க வேண்டியது நமது பணியாகும். இப்போது உலகிலுள்ள பெரும்பாலார் உலக முன்னேற்றத்தையும் அதன் பொலிவையும் அதற்காக தங்களை மாய்த்துக் கொள்வதில்தான் எல்லாம் அடங்கியிருக்கிறது என்று கருதுகின்றனர். ஆனால், இந்த தற்காலிக ஒளிகளின் இறுதியில் காரிருள் இருக்கின்றது என்பது இவர்களுக்குத் தெரியாது. அதில் இவர்கள் மூழ்கப் போகிறார்கள் என்பதும் இவர்களுக்குத் தெரியாது. அத்தகைய தருணத்தில் உலகிற்கு ஒளிமயமான முடிவின் வழிகளைக் காட்டுவது ஜமாஅத்தின் பணியாகும். அவர்களிடம் இது தற்காலிக ஒளிகளாகும். எவற்றின் இறுதி ஒளியாக இருக்கின்றதோ அதுவே உண்மையான ஒளியாகும் என்பதை எடுத்துக் கூறுங்கள். அது அல்லாஹ்வின் உரிமையைச் செலுத்துவதன் மூலமாகவே ஏற்படும். அவனை வணங்குவதன் மூலமாகவே அது கிடைக்கும் என்பதை எடுத்துக் கூறுங்கள். சுயநலமின்றி இறைவணக்கத்தில் ஈடுபடுவதன் மூலமாகவே அது கிடைக்கும் என்பதைக் கூறுங்கள். சுயமே நமக்கு உலகத்தை விட அதிகமாக மறுமையைப் பற்றிய கவலை இருக்கும்போதுதான் இது நடக்க முடியும். நம்மை நாமே ஆய்வு செய்து பார்க்கும்போதுதான் உலகிற்கும் இது பற்றி நம்மால் கூற முடியும். நமது மறுமையைப் பற்றிய கவலையும் நமக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் நமக்கு முன்னால் ஒளியைக் காட்ட முடியும்.

பிறகு அன்பு மற்றும் நேசத்தின் முழக்கங்களை எழுப்புபவர்களாக மட்டும் நாம் இருக்க மாட்டோம். மாறாக, பரஸ்பரம் நம்மில் ஒருவர் மற்றவரது உரிமையை செலுத்துபவர்களாகவும் நாம் இருப்போம். நமது இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்துபவர்களாக நாம் இருப்போம். அல்லாஹ்வின் அன்பைப் பெற முயற்சி செய்பவர்களாக நாம் இருப்போம். இன்னும் சொல்வதென்றால், நமது ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் எங்கு அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு பீறிட்டு எழுகின்றதோ அங்கு அல்லாஹ்வின் படைப்பினங்களுக்காகவும் அன்பு மற்றும் நேசத்தின் நீரூற்றுகள் பீறிட்டு எழும். எவர்கள் நம்மை தூரத்திலிருந்து பார்த்து நமது முழக்கங்களைக் கேட்டு நமக்கு அருகில் வருகின்றார்களோ, எவர்கள் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை நம்மிடமிருந்து கேட்டு நல்ல தாக்கத்தை பெறுகின்றனரோ அவர்கள் நமக்கு அருகில் வந்து நீங்கள் தூரத்தில் இருக்கும் போது எப்படி எங்களுக்கு தென்பட்டீர்களோ அவ்வாறு அருகில் வந்த பிறகு உங்களைப் பார்க்க முடியவில்லையே ? என்று கூறி விடக்கூடாது. நாம் மறுமையின் சுவர்க்கத்தைப் பெறுவதற்காக இவ்வுலகையும் சொர்க்கமாக ஆக்க வேண்டும். இதனை நமது இறை வணக்கங்களின் மூலமாகவும் நமது செயல்களின் மூலமாகவும் செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் சுவர்க்கங்களின் தோட்டத்தைக் கடந்து செல்லும்போது அங்கு கொஞ்சம் சாப்பிடுங்கள்; குடியுங்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள்,

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

ஜலாலுத்தீன்
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

O.A.N. DOORS & STEELS
O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்
*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*
Ambai Road, (Opp. Karuna Clinic),
Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

பெருமானார் (ஸல்) அவர்கள் இதனைக் கூறியபோது அந்த சபையில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள்தான் இதனை அறிவிக்கவும் செய்கின்றார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அப்போது அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சுவர்க்கத்தின் தோட்டங்கள் என்றால் என்ன? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், பள்ளிவாயில்களே சுவர்க்கத்தின் தோட்டங்களாகும் என்று கூறினார்கள். பிறகு நான் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சுவர்க்கத்தில் உண்பது, குடிப்பது என்பது என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், அல்லாஹ்வை நினைவு கூர்வது, தஸ்பீஹ் செய்வது, இறைவனை புகழ்வது, அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுவது, லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவது, அல்லாஹு அக்பர் என்று கூறுவது ஆகிய இவை அனைத்தும் சொர்க்கத்தில் உண்பதும், குடிப்பதும் ஆகும் என்று கூறினார்கள். (சுனன் திர்மிதி அப்வாபுத் த..வாத் ஹதீஸ் எண் 3509)

எனவே, தொழுகைகளை நிறைவேற்றுவதுடன் பள்ளிவாயில்களில் அமர்ந்து தஸ்பீஹ் செய்வது, இறைவனை புகழ்வது, அல்லாஹ்வின் பெருமையை எடுத்துக் கூறுவது ஆகிய இவைதான் இவ்வுலகில் சுவர்க்கத்தின் கனிகளை உண்பதாகும். எனவே, எவர்கள் இவ்வாறு அல்லாஹ்வை நினைவு கூர்வதன் பக்கமும், அவனை வணங்குவதன் பக்கமும் கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருப்பார்களோ அவர்கள் மறுமையின் சுவர்க்கத்தை மட்டும் பார்க்க மாட்டார்கள். மாறாக, அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டவாறு அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமையைச் செலுத்துவதற்கும் முயற்சி செய்வார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப தமது செயல்களை வடிவமைத்துக் கொள்ளவும் முயற்சி செய்வார்கள்.

எனவே, இவ்வுலகில் சுவர்க்கத்தின் கனிகளைச் சாப்பிட்டு பிறருக்கும் அவற்றை வழங்கக் கூடியவர்கள் எவ்வளவு நற்பாக்கியம் பெற்ற மக்களாக இருக்கின்றனர். அத்தகையவர்கள் மறுவுலகிலும் இறைவனின் திருப்தியைப் பெறக் கூடியவர்களாக இருப்பர். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தக்வாவிற்கேற்ப செயல்படக்கூடிய அத்தகைய மக்களைச் சார்ந்தவர்களாக அவர்கள் இருப்பர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் எல்லா கட்டளைகளையும் விட அதிகமாக தக்வா மற்றும் தீமைகளிலிருந்து விலகி இருப்பது தொடர்பாக வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் தக்வா ஒவ்வொரு தீமையிலிருந்தும் தவிர்ந்திருப்பதற்கான ஆற்றலை வழங்குகின்றது. ஒவ்வொரு நன்மையின் பக்கமும் ஓடிச் செல்வதற்கான அசைவை அது ஏற்படுத்துகின்றது. இதனை இந்த அளவு வலியுறுத்திக் கூறியிருப்பதன் இரகசியம் என்னவென்றால், தக்வா ஒவ்வொரு வாசலிலும் மனிதனுக்கு நிம்மதியை வழங்கக்கூடிய அடைக்கலமாக இருக்கின்றது. ஒவ்வொரு குழப்பத்திலிருந்தும் பாதுகாப்பாக இருப்பதற்கான அழகிய கோட்டையாக அது இருக்கின்றது. அதாவது, வலுவான கோட்டையாகவும் அது இருக்கின்றது. தக்வாவிற்கேற்ப செயல்படும்போது மனிதன் ஷய்த்தானை விட்டும் விலகியிருக்கின்றான். இறையச்சமுள்ள ஒரு மனிதன் பல வீணான அபாயகரமான சண்டைகளிலிருந்தும் தவிர்ந்திருக்க முடியும். அதில் மற்ற மக்கள் சிக்கி சில நேரங்களில் அழிந்து விடுகின்றனர். (அய்யாமுஸ்ஸுல்ஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 14 பக்கம் 342) ஒவ்வொருவரும் இந்த விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் வெளிப்படுத்திக் காட்டியுள்ள இந்த தியாகத்தின் முன்னுதாரணங்களை தக்வாவின் மூலமாக நிலைத்திருக்கும்படி செய்வது அவசியமானதாகும். அவ்வாறு செய்யா விட்டால் அவை தற்காலிகமான தியாகங்களாக ஆகி விடும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று தப்லீகிற்குரிய உரிமையைச் செலுத்துவதும் இறைவனுக்கு நன்றி செலுத்துவதாகும். பள்ளிவாயில் கட்டப்பட்டதனால் பல மக்களது பார்வையும் சுயமாகவே பள்ளிவாயிலின் பக்கம் எழும். பள்ளிவாயிலைப் பார்த்து உங்கள் பக்கம் அவர்களது கவனம் ஏற்படும். இங்கு வசிக்கின்ற அஹ்மதிகளின் பக்கம் கவனம் ஏற்படும். அப்போது ஒவ்வோர் அஹ்மதியின் செயலும் தக்வாவும்தான் மற்றவர்கள் நேர்வழி பெறுவதற்கான காரணியாக அமையும். எனவே, இந்தப் பள்ளிவாயில் இங்கு வசிக்கின்ற ஒவ்வோர் அஹ்மதியின் மீதும் பொறுப்பைச் சுமத்துகின்றது. இந்தப் பொறுப்பை நிறைவேறுவதற்காக ஒவ்வோர் அஹ்மதியும் தமது முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்டுவது அவசியமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத்திலுள்ள மக்கள் முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். எந்த நபர் நமது ஜமாஅத்தில் இருந்து கொண்டு தீய முன்மாதிரியைக் காட்டுகின்றாரோ செயலளவில் அல்லது கொள்கை அளவில் பலவீனத்தைக் காட்டுகின்றாரோ அவர் அநீதியிழைப்பவராக இருக்கின்றார். ஏனென்றால், அவர் முழு ஜமாஅத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்துகின்றார். நம்மையும் ஆட்சேபனைக்கு இலக்காக்குகின்றார். தீய முன்மாதிரியைக் காட்டுவதன் மூலம் மற்றவர்களுக்கு வெறுப்பு ஏற்படுகின்றது. நல்ல முன்மாதிரியின் மூலம் மக்களுக்கு விருப்பம் ஏற்படுகின்றது.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: சில மக்களது கடிதம் நமக்கு வருகின்றது. அதில் அவர்கள் நாங்கள் உங்களது ஜமாஅத்தில் இணையா விட்டாலும் உங்கள் ஜமாஅத்திலுள்ள சிலரது நிலைமைகளைப் பார்த்து இந்த ஜமாஅத்தின் போதனையில் கண்டிப்பாக நன்மை இருக்கின்றது என்பதை எங்களால் கணிக்க முடிகின்றது என்று எழுதுகின்றனர்.

இன்றும் கூட பல மக்களும் எனக்கு இவ்வாறு எழுதுகின்றனர். அவ்வாறே மக்கள் என்னைச் சந்திக்கும்போது இதனைக் கூறுகின்றனர். உங்கள் ஜமாஅத்திலுள்ள மக்களைப் பார்த்து நீங்கள் வழங்கும் போதனை அன்பு, நேசம், அமைதி, நிம்மதி ஆகியவற்றின் போதனையாகும் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. எனவே, இந்த நல்லொழுக்கத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்துவதும், இந்த போதனைக்கேற்ப தொடர்ந்து செயல்படுவதும், தொடர்ந்து அவற்றை தமது செயல்களில் வடிவமைத்துக் கொள்வதும் ஒவ்வோர் அஹ்மதிக்கும் அவசியமானதாகும்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறைவனும் மனிதனின் செயல்களுக்கான டைரியை தயார் செய்கின்றான். தினமும் நமது செயல்கள் எழுதப்படும் டைரி தயாராகின்றது. எனவே, மனிதனும் கூட தனது நிலைமைகளின் ஒரு டைரியை தயார் செய்ய வேண்டும். அல்லாஹ் டைரியை உருவாக்கத்தான் செய்கின்றான். ஆனால், மனிதனும் தமது செயல்களை ஆய்வு செய்து பார்த்தவாறு ஒவ்வொரு நாளும் தமது செயல்களை எழுதும் டைரியை தயார் செய்ய வேண்டும். அதில், நான் என்ன நல்ல பணிகளைச் செய்துள்ளேன். என்னென்ன தீமைகளைச் செய்துள்ளேன் என்று எழுத வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: மனிதனும் கூட தனது நிலைமைகளின் ஒரு டைரியை தயார் செய்ய வேண்டும். பிறகு, அதைப் பற்றி சிந்திக்க வேண்டும். அதாவது, எழுதினால் மட்டும் போதாது. அதைப் பற்றி சிந்திக்கவும் வேண்டும். நன்மைகளில் எந்த அளவு அவன் முன்னேறிச் சென்றுள்ளான் என்பதைப் பார்க்க

## வெளி வேஷம் ஒரு நோயாகும். இதன் அபாயகரமான விளைவுகள் வெளிப்படுகின்றன

*ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:*

*“நன்மை செய்வதில் போதுமென்ற மனமும் சோம்பேறித் -தனமும் பலவீனமும் இருக்கக் கூடாது. ஆனால், அத்துடன் அதில் வெளி வேஷம் இருக்கக் கூடாது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். பல மக்களும் தாம் செய்கின்ற பணிகளை வெளிப்படுத்திக் காட்ட விரும்புகின்றனர். அதாவது அவர்கள் செய்யும் பணிகளைப் பலமுறை பாராட்டிக் கூற வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், இது ஒரு நோயாகும். அது மிகவும் மறைவாக இருக்கின்றது. அதற்கு மிகவும் அபாயகரமான விளைவுகள் வெளிப்படுகின்றன. இந்த விஷயம் முபல்லிக்குகளிடம் கூட இருக்கின்றது. அவர்கள் அறிக்கைகளை எழுதி அனுப்புகின்றனர். அது பத்திரிகையில் வெளிவரவில்லை என்றால் பத்திரிகைக்காரர்களை அதட்டி கடிதம் எழுதுகின்றனர். பத்திரிகையில் எமது அறிக்கையை வெளியிட எங்களுக்கு உரிமை இல்லையா? என்று கேட்கின்றனர். அறிவுரை செய்பவர்களிடமும் இந்த நோய் இருக்கின்றது. இதன் விளைவாக அவர்களது உள்ளங்களில் துருப்பிடித்து விடுகின்றது. பல அஞ்சுமன்களும் தாம் செய்கின்ற பணிகளை பிறர் புகழ்ந்து பாராட்ட வேண்டும் என்று விரும்புகின்றனர். அவர்கள் பெரிய பணியைச் செய்துள்ளனர் என்று மக்கள் கூற வேண்டும் என்பதற்காக அவர்கள் தமது பணிகளைப் பெரிதாக விளம்பரப்படுத்திக் காட்டுகின்றனர். ஆனால், அவ்வாறு செய்பவர்கள் எதையும் செய்யவில்லை. மற்றவர்களைப் பணி செய்யத் தூண்டுவதற்காகவும் ஆர்வமூட்டுவதற்காகவும் தமது பணிகளை வெளிப்படுத்திக் காட்டுவது என்பது வேறு விஷயமாகும். ஆனால், மற்றவர்களது நாவிலிருந்து அவர்கள் பெரிய பணியைச் செய்துள்ளார்கள் என்று அவர்கள் கூறுவதைக் கேட்க வேண்டும் என்பதற்காக பணி செய்யக் கூடாது. எனவே, நம்பிக்கை கொண்டவர் வெளி வேஷத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும். வெளி வேஷத்தினால் இறைவனின் நெருக்கம் கிடைக்காமல் போய் விடும்.”*

*(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 5 பக்கம் 526-527*
*அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 1 ஏப்ரல் 2016 பக்கம் 11)*

வேண்டும். நேற்று எந்த இடத்தில் அவன் இருந்தானோ அதை விட இன்று அவன் முன்னேறிச் சென்றுள்ளானா? என்று பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதனுடைய இன்றைய நாளும், நாளையும் ஒன்றுபோல் இருக்கக் கூடாது. எவரது இன்றைய நாளும், நாளையும் அவன் நன்மைகளில் முன்னேறுவதில் ஒன்றுபோல் சமமாக இருக்கின்றதோ அவர் இழப்பில் உள்ளார். நேற்று நம்மிடமிருந்த நன்மையில் இன்றும் நாம் நிலைத்திருக்கின்றோம் என்பதில் நீங்கள் மகிழ்ச்சி அடைந்து விடாதீர்கள். மாறாக, நேற்றை விட நன்மைகள் செய்வதில் இன்று உங்களது பாதங்கள் முன்னேறியிருக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றார்கள். அவ்வாறில்லையென்றால் நீங்கள் நற்பலனைப் பெறவில்லை. மாறாக, நஷ்டத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

மனிதன் இறைவனை ஏற்றுக் கொள்பவனாகவும், அவன் மீது முழுமையாக நம்பிக்கை வைப்பவனாகவும் இருந்தால் அவன் ஒருபோதும் வீணாக்கப்பட மாட்டான். இன்னும் சொல்வதென்றால், அந்த ஒரு மனிதனுக்காக இலட்சக் –கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படும். (மல்.்பூஸாத் தொகுதி 10 பக்கம் 137-138; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, இன்று உலகை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டியது அஹ்மதிகளின் பணியாகும். ஆனால், நன்மைகளில் நமது பாதங்கள் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதே அதற்கான நிபந்தனையாகும். இதனையே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த ஒரு மனிதனுக்காக இலட்சக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படும் என்று கூறுகின்றார்கள்.

எனவே, ஒவ்வோர் அஹ்மதிக்கும் இது மிகப்பெரும் பொறுப்பாகும். அதாவது, அவர் உலகை அழிவிலிருந்தும் காப்பாற்ற வேண்டும். எந்த உலகம் இறைவனை மறந்து விட்டதோ அந்த உலகை காப்பாற்ற வேண்டியது நமது கடமையாகும். நல்லொழுக்கத்தில் சில மக்கள் சிறந்து விளங்கினாலும் கூட அவர்கள் எங்களது நல்லொழுக்கம் சிறப்பாக இருக்கும்போது நாங்கள் ஏன் மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்? என்று கேட்கின்றனர். அடிப்படையான விஷயங்களில் அவர்களது ஒழுக்கம் சிறப்பானதாக இருக்கின்றது. அன்றாட பணிகளிலும் பரஸ்பரம் ஒருவர் மற்றவரை சந்திக்கும்போதும் அவர்கள் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். எவர்களது உரிமையையும் அவர்கள் பறிப்பதில்லை. ஆனால், சில விஷயங்களில் சுதந்திரம் என்ற பெயரில் ஒழுக்க ரீதியாக முற்றிலுமாக அவர்கள் சீர்குலைந்து போய் இருக்கின்றனர். சட்டமும் இவர்களுக்கு இவ்விஷயத்தில் பாதுகாப்பை வழங்குகின்றது. உலகம் அல்லாஹ்வை முற்றிலும் மறந்து விட்டது. இந்நிலையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ள நாமும் கூட நமது உயர் தகுதிகளை மறந்து, இறைவனை மறந்து, நமது இஸ்லாமிய நல்லொழுக்கத்தை மறந்து உலகில் பின்னால் சென்று விட்டால் பிறகு உலகை யார் சீர்திருத்துவார்?

இவர்களைத் தவிர மற்ற மக்கள் உமக்கு கிடைப்பார்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவனின் வாக்குறுதி தரப்பட்டிருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால், நாம் அதிலிருந்தும் விலகியவர்களாக ஆகி விடக் கூடாது. எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்று தம்மை ஆய்வு செய்து பார்ப்பது ஒவ்வோர் அஹ்மதிக்கும் கடமையாகும். அதன் மூலமாக நாம் நமது பொறுப்புகளை சரியான முறையில் நிறைவேற்ற முடியும்.

பள்ளிவாயிலைக் கட்டி விட்டோம் என்ற இந்த விஷயத்தினால் மட்டும் நாம் மகிழ்ச்சி அடைந்து விட வேண்டாம். இறைவன் முன் குனிபவர்கள் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் வருபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்படி செய்வதே நமது இலக்காகும். நமது ஒவ்வோர் அடியும் முன்னேறிச் செல்லாமல் இது நடைபெறாது. நம்மில் ஒவ்வொருவரும் நம்மவருக்காகவும் மற்றவர்களுக்காவும் ஒரு முன்மாதிரியாக திகழாத வரை இது நடைபெறாது. நம்மில் யாரும் எவருக்கும் துக்கத்தைத் தரக்கூடியர்களாக இருக்கக்கூடாது. மாறாக, நம்மவருக்கும் மற்றவர்களுக்குமுரிய உரிமையை செலுத்துபவர்களாக நாம் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: உங்களுக்காகவும், உங்களது சந்ததிகளுக்காகவும், உங்களது மனைவி மக்களுக்காகவும், உங்களது நெருக்கமான உறவினர்களுக்காவும் கருணை காட்டக்கூடியவர்களாக நீங்கள் திகழ வேண்டும். எதிரிகளுக்கு ஆட்சேபனைகளைச் செய்வதற்கான சர்ந்தர்ப்பத்தை ஒருபோதும் வழங்கக் கூடாது. (மல்.்பூஸாத் தொகுதி 10 பக்கம் 138; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, நம்மில் ஒவ்வொருவரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த வேதனையை உணர வேண்டும். ஜமாஅத்திற்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் நற்பெயரை தேடித் தருவதற்கு காரணமாக அமைகின்ற நற்செயல்களை நாம் செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! நமது நாளை நமது இன்றைய நாளை விட சிறந்ததாக இருக்கட்டுமாக! நமது சந்ததிகளும் நமது அடுத்த தலைமுறையும் நமது பெற்றோர்களும் இந்த தியாகங்களைச் செய்துள்ளனர்; பள்ளிவாயில்களைக் கட்டினர்; தப்லீக் பணிகளைச் செய்தனர்; தமது பிள்ளைகளுக்கு உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குமாறு போதித்தனர். இதுவே அவர்கள் உங்களுக்காக விட்டுச் சென்றுள்ள உண்மையான செல்வமாகும் என்பதை புரிய வையுங்கள். அடுத்த தலைமுறையினரிடமும் வருங்கால தலைமுறையினரிடம் இந்த சிந்தனையை ஏற்படுத்திக் கொண்டே செல்ல வேண்டும். இந்தத் தொடர் நீடித்துக் கொண்டிருக்குமாறு அல்லாஹ் செய்வானாக! அல்லாஹ்வின் அருள்களை சேகரிக்கக் கூடியவர்களாக நமது வருங்கால தலைமுறையும் இருக்கட்டுமாக! அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

(கடைசிப் பக்கத்தின் தொடர்ச்சி...)

பெறுவதாகும். இறையச்சத்தின் படி நடப்பதாகும். அல்லாஹ்வுக்குரிய உரிமையை வழங்குவதாகும். மேலும் அவனது படைப்பினங்களுக்குரிய உரிமையை வழங்குவதாகும் என்பதை புரிந்து கொள்கின்றார்..... உண்மையான நிம்மதி நன்மைகள் செய்வதன் மூலமாகவே கிடைக்கின்றது. செல்வத்தைச் சேர்ப்பதால் அது கிடைக்காது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்: இந்தக் காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே ஓர் அமைப்பின் கீழ் செயல்படுகின்ற நம்பிக்கை கொண்டவர்களின் ஒரு ஜமாஅத் ஆகும். அது இஸ்லாத்தைப் பரப்புவதற்காக செலவு செய்கின்றது. அதில் பல்வேறு வழிமுறைகள் மூலம் செய்யப்படுகின்ற தப்லீக் பணிகளும் அடங்கும். மனித குலத்தின் மீதுள்ள அனுதாபத்தின் காரணமாக அவர்களுடைய உரிமையைச் செலுத்தியவாறு அவர்களுக்காகவும் செலவிடப்படுகின்றது. பல மக்களும் கஷ்டத்தைச் சகித்துக் கொண்டு செலவிடுகின்றனர். இவ்வாறு செலவு செய்வதன் மூலமாக அல்லாஹ்வின் நெருக்கத்தையும் அவனது திருப்தியையும் பெற்றவர்களாக நாம் ஆகி விடுவோம் என்ற உறுதி அவர்களுக்கு இருக்கின்றது. அத்துடன் அந்த செல்வம் சரியான வழியில் செலவிடப்படும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருக்கின்றது. (குத்பா ஜுமுஆ 11 நவம்பர் 2016)

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் குத்பா பேருரையின் இறுதியில் பொருள் தியாகம் செய்தவர்களுக்காக இவ்வாறுதுஆவும் செய்தார்கள்: அல்லாஹ் இந்தத் திட்டத்தில் பங்கு பெற்றுள்ள அனைவரது பொருளிலும் ஆன்மாவிலும் அளவற்ற அருள் புரிவானாக! இவர்களின் தியாகங்களை ஏற்றுக் கொள்வானாக! வருங்காலத்திலும் முன்னேறிச் சென்று தியாகங்கள் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! மேலும் இவர்களுக்கு கிலா.்பத்தோடு இன்னும் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டே செல்வானாக! ஆமீன்.

அல்லாஹ் ஹுஸூர் அவர்களின் இந்த துஆவிற்கு நம்மை வாரிசாக்குவானாக! ஆமீன்.

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

*தீர்க்கதரிசியின் நூலையும் படித்துப் பாருங்கள். அளவுக்கு அதிகமாக ஏன் தீங்கு விளைவிக்கின்றீர்கள் ? ஒரு நாளில் நாம் மரணிக்க வேண்டாமா என்ன ? தற்பெருமையும் நேர்மையின்மையும் ஈமானுடன் ஒன்று சேர முடியாது.*

*1 எவரைப் பற்றியாவது அவர் பதினைந்து மாதங்களுக்குள் தொழுநோயாளி -யாக ஆகி விடுவார் என்று முன்னறிவிப்பு செய்யப்பட்டு அவர் 15 மாதங்களுக்குப் பகரமாக 20 மாதங்களில் தொழுநோயாளியாக ஆகி விட்டாரென்றால், அவரது மூக்கு மற்றும் எல்லா உடலுறுப்புகளும் விழுந்து விட்டால், பிறகு முன்னறிவிப்பு நிறைவேறவில்லை என்று கூறுவதற்குரிய அனுமதி அவருக்கு இருக்கிறதா ? நடந்த சம்பவம் தொடர்பான விஷயங் -களைப் பார்க்க வேண்டும்.*

*2 அடிக்குறிப்பு: இந்தக் கருத்து நினைவில் கொள்ளத் தகுதியுடையதாகும். அதாவது, அப்துல்லாஹ் ஆத்தம் தொடர்பாகவும், லேக்ராம் தொடர்பாகவும் அவர்களது மரணம் பற்றி முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அப்துல்லாஹ் ஆத்தம் மிகுந்த பணிவையும் தாழ்மையையும் வெளிப்படுத்தி காட்டினார். எனவே, அவரது மரணம் குறிப்பிடப்பட்ட கால அளவை விட சில மாதங்கள் தாமதமாகவே நிகழ்ந்தது. லேக்ராம் இந்த முன்னறிவிப்பைக் கேட்ட பிறகு தற்பெருமையை வெளிப்படுத்திக் காட்டினார். கடை வீதிகளிலும் கூட்டங்களிலும் நமது நபி (ஸல்) அவர்களை ஏசிப் பேசி வந்தார். எனவேதான், முன்னறிவிப்பில் அவரது மரணம் நிகழ்வது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்த அசல் கால அளவு முடிவதற்கு முன்னதாகவே அவர் பிடிக்கப்பட்டார். குறிப்பிட்ட கால அளவில் ஒரு வருடம் எஞ்சியிருந்தும் கூட அவர் கொல்லப்பட்டார். அப்துல்லாஹ் ஆத்தம் மீது இறைவன் தனது மென்மையான பண்பை வெளிப்படுத்திக் காட்டினான். லேக்ராமிடம் இறைவன் தனது கம்பீரமான பண்பை வெளிப்படுத்திக் காட்டினான். அவன் வல்லமையுள்ளவன். கால அளவை அவனால் குறைக்கவும் முடியும்; அதிகமாக்கவும் முடியும்.*

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 192-194)*

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

Vol. 1 | Thursday 8 DECEMBER 2016 | Issue No. 40 | ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

# தஹ்ரீகே ஜதீதின் புதிய வருடத்திற்கான அறிவிப்பு இந்தியாவிலுள்ள சகோதரர்களிடம் உருக்கமான வேண்டுகோள்

நமது அன்பு இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கடந்த 11 நவம்பர் 2016 -ல் தஹ்ரீகே ஜதீதின் புதிய வருடத்திற்கான அறிவிப்பை செய்தார்கள். 31 அக்டோபர் 2016 அன்று தஹ்ரீகே ஜதீதின் 82 -வது வருடம் முடிவடைந்தது. 1 நவம்பர் 2016 -லிருந்து 83 -வது வருடம் ஆரம்பமாகி விட்டது. ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் பொருள் தியாகத்தின் முக்கியத்துவம், சிறப்பு மற்றும் அதன் அருள்களைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். பல்வேறு நாடுகளைச் சார்ந்த ஜமாஅத் சகோதரர்கள் செய்துள்ள பொருள் தியாகங்கள் தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக் கூடிய சம்பவங்களை எடுத்துக் கூறினார்கள். இறுதியில் உலகம் முழுவதுமான நாடுகள் தரப்பிலிருந்து தஹ்ரீகே ஜதீது சந்தாவிற்காக செய்துள்ள பொருள் தியாகங்கள் தொடர்பான அறிக்கையை எடுத்துக் கூறினார்கள். ஹுஸுர் அவர்கள் எடுத்துக் கூறியுள்ள அறிக்கையின் அடிப்படையில் கடந்த வருடத்தில் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஒரு கோடியே 9 இலட்சத்து 33 ஆயிரம் பவுண்டுகளை இந்தத் திட்டத்திற்காக தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ளது - அல்ஹம்துலில்லாஹ். இந்த வசூல் கடந்த ஆண்டை விட 17 இலட்சத்து 17 ஆயிரம் பவுண்டுகள் அதிகமாகும்.

நாடுகளின் தர வரிசையின் அடிப்படையில் இதற்து முன்பிருந்தது போன்றே பாகிஸ்தான் முதலிடத்தில் உள்ளது. இதற்குப் பிறகு ஜெர்மனி இரண்டாம் இடத்தில் உள்ளது. இங்கிலாந்து மூன்றாவது இடத்தில் உள்ளது. அமெரிக்கா நான்காவது இடத்தில் உள்ளது. கனடா ஐந்தாவது இடத்தில் உள்ளது. இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது. ஆஸ்திரேலியா ஏழாவது இடத்தில் உள்ளது. எட்டாவது இடத்தில் மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள ஒரு ஜமாஅத் உள்ளது. ஒன்பதாவது இடத்தில் இந்தோனேஷியாவும், பத்தாவது இடத்தில் மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள ஒரு ஜமாஅத்தும் உள்ளது. பதினொன்றாவது இடத்தில் கானாவும், 12 -வது இடத்தில் சுவிட்சர்லாந்தும் உள்ளது.

தஹ்ரீகே ஜதீது சந்தாவில் பங்கு பெற்றுள்ளவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 14 இலட்சத்து 4 ஆயிரத்தையும் விட அதிகமாகும். இத்திட்டத்தில் இணையக் கூடியவர்களின் எண்ணிக்கையில் இந்த வருடம் 90 ஆயிரம் பேர் அதிகரித்துள்ளனர். புதிய மக்களை இத்திட்டத்தில் இணைப்பதில் எந்த நாடுகள் அதிகமாக முயற்சி செய்துள்ளதோ அவை பெனின், நைஜர், மாலி, புர்கினோஃபாஸோ, கானா, லைபீரியா, செனிகால், கேமரூன் ஆகியவையாகும். முழு உலகிலும் ஒவ்வோரிடத்திலும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது என்று ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்.

இந்தியாவிலுள்ள முதல் 10 ஜமாஅத்துகள்: 1) கருளாயி - கேரளா 2) கோழிக்கோடு - கேரளா 3) ஹைதராபாத் - ஆந்திர பிரதேசம் 4) பத்தப்பிரியம் - கேரளா 5) காதியான் 6) கன்னூர் டவுண் - கேரளா 7) பைங்காடி - கேரளா 8) தில்லி 9) கொல்கத்தா - மேற்கு வங்காளம் 10) சூளூர் - தமிழ்நாடு.

நாடுகளின் தர வரிசையின் அடிப்படையில் இந்தியா ஆறாவது இடத்தில் இருக்கின்றது. நிச்சயமாக இந்த விஷயம் இந்தியாவிலுள்ள ஜமாஅத் சகோதரர்களின் மகிழ்ச்சிக்கு காரணமாக இருக்கும். தஹ்ரீகே ஜதீதின் பணியாளர்களும் அதிகாரிகளும் அவர்களது உழைப்பு பலன் தந்திருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைவர். அதனால் இந்தியா தனது முந்தைய தர வரிசையை அடைவதில் வெற்றி பெற்றிருக்கின்றது.

வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதனை நாங்கள் கூறுகின்றோம். 2010 -ஆம் ஆண்டு ஏழாவது இடத்தில் இருந்து வந்த இந்தியா கொஞ்சம் முன்னேறி ஆறாவது இடத்தில் வந்தது. பிறகு தொடர்ந்து தனது இந்த தர வரிசையில் நிலைத்து நின்றது. ஆனால், 2015 -ஆம் ஆண்டில் இது தனது ஆறாவது இடத்தையும் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை. ஏழாவது இடத்திற்கு அது வந்தது. அந்த வருடம் ஆஸ்திரேலியா இந்தியாவை பின்தங்க வைத்து விட்டு ஆறாவது இடத்தைக் கைப்பற்றியது. இப்போது 2016 -ஆம் ஆண்டில் இந்தியா தான் இழந்து விட்ட அந்த தரத்தை மீண்டும் பெற்று விட்டது - அல்ஹம்துலில்லாஹ் ஸும்ம அல்ஹம்துலில்லாஹ். இதற்காக தஹ்ரீகே ஜதீதின் இன்ஸ்பெக்டர்கள், பணியாளர்கள் மற்றும் அதன் அதிகாரிகள் நிச்சயமாக வாழ்த்துக்களுக்குத் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் மிகவும் உழைத்து இரவென்றும் பகலென்றும் பாராமல் பணியாற்றியதன் விளைவாக தாங்கள் இழந்து விட்ட அந்த தகுதியை மீண்டும் பெற்றுள்ளனர். இந்திய ஜமாஅத் சகோதரர்களும் மிகவும் அதிகமாக வாழ்த்துக்களுக்கு தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தங்கள் சந்தாக்களில் பெருமளவில் பொருத்தமான அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளனர். அவர்கள் மிகவும் ஆர்வத்துடன் இந்த சந்தாவில் பங்கு பெற்றுள்ளனர். இதன் காரணமாக இந்தியா உலகிலுள்ள எல்லா நாடுகளின் தர வரிசையில் தமது ஆறாவது இடத்தை மீண்டும் பெற்று விட்டது.

இந்தியாவிலுள்ள ஜமாஅத் சகோதரர்களிடம் மிகவும் மரியாதையுடன் நாங்கள் வேண்டிக் கொள்வது என்னவென்றால், இந்த ஆன்மீக ஓட்டப் பந்தயத்தில் போட்டி மிகவும் கடுமையாக இருக்கின்றது. நாம் நமது முழுமையான சக்திக்கேற்ப இந்த வழியில் தியாகங்கள் செய்யவில்லை என்றால் ஆன்மீகத்தின் இந்த ஓட்டப்பந்தயத்தில் வேறொரு நாடு நம்மை விட முன்னேறிச் சென்று விடலாம். பிறகு இதனால் நமக்கு மிகவும் வேதனையும் வெட்கப்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டு விடும்.

இன்னும் சொல்வதென்றால் உண்மை இதுவாகும். அதாவது பல வருடங்களாக ஆறாவது இடத்திலேயே இருந்து வருகின்ற நாம் ஐந்தாவது இடத்தைப் பெறுவதற்கு எல்லா வகையான முயற்சியையும் செய்ய வேண்டும். மேலும் இதற்காக உங்கள் சந்தாக்களை பெருமளவில் அதிகரிக்க வேண்டும். இது ஓர் உண்மையாகும். அதாவது அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்பவர்கள் வீணாகி விடுவதில்லை. அவனது வழியில் தியாகம் செய்வதன் மூலம் செல்வத்திற்கும் எந்த இழப்பும் ஏற்படுவதில்லை. அல்லாஹ் அதனை தன்னிடம் வைத்துக் கொள்வதில்லை. மாறாக அதை பெருகச் செய்து நமக்கு திரும்ப வழங்குகின்றான்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வசூலின் அடிப்படையில் தர வரிசையில் முன்னணியில் இருக்கின்ற மாநிலங்களைப் பற்றியும் ஜமாஅத்துகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள். இதன் நோக்கம் நன்மையின் இந்தக் களத்தில் மாநிலங்கள் கூட தங்களுக்கிடையில் நடைபெறுகின்ற இந்தப் போட்டியில் ஒருவர் மற்றவரை விட முன்னேறிச் செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதேயாகும். இதற்காக அவர்கள் போட்டி போட வேண்டும். அவ்வாறே ஜமாஅத்துகளும் அவற்றில் ஒரு ஜமாஅத் இன்னொரு ஜமாஅத்தை விட முன்னேறிச் செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதற்காக ஜமாஅத்துகளுக்கு இடையில் போட்டி இருக்க வேண்டும். அல்லாஹ் தனது சமுதாயத்திற்கு ஃபஸ்தபிகுல்கைராத் - நன்மைகளில் ஒருவர் மற்றவரை முந்திச் செல்ல வேண்டும் என்ற திருக்குர்ஆனின் கட்டளைக்கேற்ப ஒருவர் மற்றவரை விட முந்திச் செல்வதற்கு முயற்சி செய்வதன் பக்கம் கவனமூட்டியுள்ளான். எனவே, கர்நாடகா, கேரளாவை பின்தங்க வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். தமிழ்நாடு, ஆந்திர பிரதேசத்தைப் பின்தங்க வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறே ஜமாஅத்துகளில் கோழிகோடு கருளாயியை பின்தங்க வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். பத்தப்பிரியம் ஹைதராபாத்தை பின்தங்க வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். காதியான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வாழ்ந்த ஊராக இருப்பதால் அது எல்லாரையும் விட முன்னேறிச் செல்லதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 11.11.2016 -ல் நிகழ்த்திய தமது குத்பா பேருரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

செல்வத்தைச் சேர்ப்பது மற்றும் அதை நமது சுகபோகங்களுக்காக மட்டுமே செலவு செய்வதே மகிழ்ச்சி மற்றும் நிம்மதிக்குக் காரணமாக அமையும் என்று இன்றைய உலகம் கருதுகின்றது. ஆனால், மார்க்கத்தைப் பற்றிய உண்மையான அறிவு மற்றும் ஞானத்தை உடைய உண்மையான நம்பிக்கை கொண்டவர் சந்தேகமின்றி அல்லாஹ் உலக அருள்களையும் வசதிகளையும் மனிதனுக்காக படைத்திருக்கின்றான். ஆனால், வாழ்க்கையின் உண்மையான நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியைப்

(தொடர்ச்சி 7 -வது பக்கம்...)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad